R.No.19928/H2/2015

## பொதுமக்கள் கவனத்திற்கு

1. உரிமை மாற்றத்தின்போது வாகனத்தை வாங்குபவர் சம்பந்தப்பட்ட வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் விண்ணப்பித்து (Form 29 & 30 – Transfer of Ownership) அசல் பதிவுச் சான்றிதழில் தனது பெயருக்கு உரிமை மாற்றம் செய்து கொள்ள வேண்டும். வாகனத்தை விற்பனை செய்பவர் இதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

2. முகவரி மாற்றத்தின்போது, வாகன உரிமையாளர் சம்மபந்தப்பட்ட வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் விண்ணப்பித்து (Form 33 Change of Address) தனது புதிய முகவரியினை உடனடியாக அசல் பதிவுச் சான்றிதழில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

3. வாகனம் பொதுச் சாலையில் இயக்கத் தகுதியற்ற நிலையில் வாகனத்தின் அசல் பதிவுச் சான்றிதழை உரிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் ஒப்படைப்பு செய்து ஒப்படைப்பு சான்றிதழ் (Certificate of Surrender) பெற வேண்டும்.

மேற்கண்ட செயல்முறைகளை முறையாக கடைப்பிடிக்கும் போது பதிவுச் சான்றிதழ்கள் தவறான முறையில் பயன்படுத்துவது தவிர்க்கப்பட்டு சட்டரீதியாக தங்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளை பொதுமக்கள் தவிர்த்துக் கொள்ளலாம் என்பது தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ஒம்/- த.பிரபாகரராவ்,
அரசு கூடுதல் முதன்மை செயலாளர்/
போக்குவரத்து ஆணையர் (பொ),
சேப்பாக்கம், சென்னை-5.